## மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிமன்றம், சேலம்

முன்னிலை - திரு.வே.புகழேந்தி, இளநிலைச் சட்டம்,
மூன்றாம் கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, சேலம்

**2026–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21–ஆம் நாள் செவ்வாய் கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 சித்திரைத் திங்கள் 08–ஆம் நாள்**

**குற்ற மேல்முறையீட்டு வழக்கு எண் 10/2026–இல்**
**குற்றவியல் பல்வகை மனு எண்.01/2026 –இல்**
**சுருக்குமுறை வழக்கு எண் 2223/2020**
**(on the file of Judical Magistrate No.1, Salem)**
**CNR No. TNSA01-000097-2026**

**R.இளங்கோவன்(வயது 56) த/பெ. இராஜமாணிக்கம்**
**வேலவா கன்ஸ்ட்ரக்ஷன் (பி)லிட்., அலுவலகம் –**
**கதவு எண் 1, 2–ஆம் தளம்,ARS டவர்ஸ்,**
**ஜங்ஷன் முதன்மைச் சாலை, சூரமங்கலம்,**
**திருவாக்கவுண்டனூர், சேலம் 636 005.**
**நெ.5/15, குஞ்சம்மாள் தெரு, 12–ஆம் வட்டம்,**
**கருப்பூர், ஓமலூர் வட்டம்,**
**சேலம் மாவட்டம். ...மேல்முறையீட்டாளர்/எதிரி**

**–எதிர்–**

**S. ஷமீம் பேகம், க/பெ. ஷாஜகான், நெ. M77,**
**தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு,**
**கிழக்கு மேம்பால நகர், சேலம் – 636 005. ...எதிர்மனுதாரர்/புகார்தாரர்.**

இந்த மனு இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரருக்காக வழக்குரைஞர் **திரு. N. புனிதன்** அவர்களும் எதிர்மனுதாரருக்காக **திரு. P.ஜவஹர்** அவர்களும் தோன்றினர். இம்மனு இன்று இறுதியான விசாரணைக்கு வந்தபோது இரு தரப்பிலும் எடுத்துரைத்த வாதங்களை கேட்டும் மனு, வழக்குக் கோப்புகளை பரிசீலித்தும் இந்த மனுவில் இன்று இந் நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கிறது.

### ஆணையுரை

01. சேலம் 01-ஆம் நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் காசோலை மோசடி குற்றத்திற்காக தொடுக்கப்பட்ட தனிநபர் முறையீட்டின்

III rd ADJ Court, Salem

-பேரிலான சுருக்குமுறை விசாரணை வழக்கு எண் 2223/20 வழக்கில் அந் நீதிமன்றம் 27.11.2025-ஆம் தேதியன்று பிறப்பித்தத் தீர்ப்பில் மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு விதிக்கப்பட்டத் தண்டனையின் நிறை - வேற்றத்தை மேல்முறையீடு முடிகின்றவரை நிறுத்திவைத்து மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு பிணை வழங்கக் கோரி பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதாவின் 430(1)-ஆம் பிரிவின்கீழ் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

02. விசாரணை நீதிமன்றம் சுருக்குமுறை விசாரணை வழக்கு எண் 2223/20 வழக்கில் 01-ஆம் எதிரியான நிறுவனமும் 02-ஆம் எதிரியான 01-ஆம் எதிரி நிறுவனத்தின் சார்பாற்றுனரான இளங்கோவனும் மாற்று - முறையாவணங்கள் சட்டத்தின் 138-ஆம் பிரிவின்கீழ் தண்டிக்கத்தக்கக் காசோலை மோசடிக் குற்றத்திற்காக தண்டிக்கப்பட வேண்டிய குற்றவாளிகள் என்று முடிவுசெய்து 02-ஆம் எதிரிக்கு 1 ஆண்டு சாதாரண சிறை தண்டனை விதித்தும் காசோலைகளின் மொத்த மதிப்பு 20,00,000/- உரூபாயை இழப்பீட்டுத் தொகையாக வழங்கியும் இழப்பீடு தொகையை செலுத்தத் தவறினால் 1 மாதம் தவறுகை தண்டனை விதித்தும் தீர்ப்புப் பிறப்பித்தி - ருக்கிறது, அன்றே மேல்முறையீட்டாளர்/எதிரியின் விண்ணப்பத்தின்பேரில் 1 மாத காலத்திற்கு தண்டனையின் நிறைவேற்றத்தை நிறுத்திவைத்து விசாரணை நீதிமன்றம் ஆணை பிறப்பித்திருக்கிறது.

03. விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து மேல்முறை யீட்டாளர்/எதிரி இந்த மேல்முறையீட்டையும் தண்டனையை நிறுத்தி வைக்கக் கோரும் இந்த விண்ணப்பத்தையும் உரிய நேரத்திற்குள் தாக்கல்

IIIrd ADJ Court, Salem

செய்திருக்கிறார். சேலம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திலிருந்து இந் நீதிமன்றத்திற்கு இந்த வழக்கு மாற்றப்பட்ட நடவடிக்கையில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக மனுதாரர்/மேல்முறையீட்டாளரால் விசாரணை நீதிமன்றம் தண்டனையை நிறுத்தவைத்த காலத்திற்குள் இம்மனுமீது ஆணை பெற முடியவில்லை என்று தெரிகிறது. மேல்முறையீட்டாளர்/ குற்றவாளி இன்று இந் நீதிமன்றத்தில் சரணடைந்து தண்டனையை நிறுத்திவைக்கக் கோரி அவர் தாக்கல்செய்துள்ள இந்த மனுவில் உரிய ஆணை பிறப்பிக்குமாறு கோரினார். அவரது சரணடைவை இந் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

04. விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பை இந் நீதிமன்றம் ஓர்வு செய்தது. விசாரணை நீதிமன்றத்தில் முன்னிடப்பட்டச் சான்றுகளின் தொடர்புடைமை, ஏற்புடைமை விசாரணையின்போது பின்பற்றப்பட்ட நடைமுறைகள் ஆகியன குறித்து மேல்முறையீட்டில் விவாதிக்கப்பட வேண்டியது அவசியமாக இருக்கிறது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

05. மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு எதிராக உள்ள குற்றத்தின் கடுமை, அவருக்கு விதிக்கப்பட்டத் தண்டனையின் அளவு, வழக்கின் ஒட்டு மொத்தச் சங்கதிகள் சூழ்நிலைகள் ஆகியவற்றை கவனத்தில் வைத்து இந்த மனுவை அனுமதித்து மேல்முறையீட்டாளர்/எதிரிக்கு விசாரணை நீதிமன்றம் விதித்த தண்டனையின் நிறைவேற்றத்தை நிறுத்திவைப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந் நீதிமன்றம் கருதுகிறது.

06. விசாரணை நீதிமன்றம் காசோலை மோசடி வழக்கில் பிறப்பித்த தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல்செய்யப்படும்போது விசாரணை

IIIrd ADJ Court, Salem

நீதிமன்றம் இழப்பீடாக வழங்கிய தொகையில் குறைந்தது 20% தொகையை 60 நாட்களுக்குள் வைப்பீடுச்செய்ய மேல்முறையீட்டு நீதிமன்றம் ஆணை யிட வேண்டும் என்று மாற்றுமுறையாவணங்கள் சட்டத்தின் 148 ஆம் பிரிவு கூறுகிறது. 20% தொகையை வைப்பீடுச் செய்ய வேண்டும் என்பது ஒரு முழுமையான விதி அல்ல என்றும் அது மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் விருப்புரிமை என்றும் மாண்பமை உச்ச நீதிமன்றமும் உயர் நீதிமன்றமும் வகுத்துரைத்துள்ளதாகவும் அதனால் மேற்சொன்ன சட்டத்தின் 148-ஆம் பிரிவின்படியான வைப்பீட்டுத் தொகையின் சதவிகிதத்தை குறைவாக விதிக்க வேண்டும் என்றும் மனுதாரர்/மேல்முறையீட்டாளர்/ குற்றவாளி தரப்பில் வாதிட்டனர். இந்த வழக்கின் சங்கதிகள், சூழ்நிலைகள், காசோலை வழங்கப்பட்டதாகச் சொல்லப்படும் நோக்கம் ஆகியவற்றை கவனத்தில் வைத்து 20% தொகைக்குக் குறைவான தொகை வைப்பீடுச்செய்ய வேண்டும் என்று ஆணையிடுவதற்கான சூழ்நிலை இல்லை என்று இந் நீதிமன்றம் முடிவுசெய்கிறது.

**07.** இறுதியாக, இந்த மனு அனுமதிக்கப்பட்டு இந்த மேல்முறையீடு முடிகின்றவரை மனுதாரர்/மேல்முறையீட்டாளர்/குற்றவாளிக்கு விதிக்கப் - பட்ட தண்டனையின் நிறைவேற்றத்தை பின்வரும் நிபந்தனைகளுடன் நிறுத்தி வைக்க இந்நீதிமன்றம் ஆணையிடுகிறது.

(i) மனுதாரரும் அவருடன் இரு பிணையதாரர்களும் சேர்ந்து தலைக்கு 10,000/- உரூபாய் மதிப்பிற்கு இந் நீதிமன்றத்தில் பிணைமுறி எழுதிக் கொடுக்க வேண்டும்.



III rd ADJ Court, Salem

(ii) மனுதாரர் இன்றிலிருந்து 60 நாட்களுக்குள் இழப்பீட்டுத் தொகையில் 20% தொகையை சேலம் 01-ஆம் நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் வைப்பீடுச்செய்ய வேண்டும்.

(iii) இந் நீதிமன்றம் ஆணையிடும்போது இந்த வழக்கில் தோன்ற வேண்டும். தலைமறைவாகிவிடக்கூடாது.

(iv) இந்த மேல்முறையீடு முடிகின்றவரை ஒவ்வொரு மாதமும் முதல் நீதிமன்ற வேலை நாளில் விசாரணை நீதிமன்றத்தில் தோன்ற வேண்டும்.

**இந்த ஆணையுரை என்னால் சுருக்கெழுத்தரிடம் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சுச் செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026–ஆம் ஆண்டு ஏப்ரல்திங்கள் 21–ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.**

PUGAZHENTHI V Digitally signed by PUGAZHENTHI V
Date: 2026.04.21 19:00:42 +0530

**மூன்றாம் கூடுதல் மாவட்ட/அமர்வு நீதிபதி,**
**சேலம்.**

III rd ADJ Court, Salem